மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி. C. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் பங்குனித்திங்கள் 25 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 448/2021-ல்**

**அசல் வழக்கு எண். 119/2019**

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் மன்னார்குடி டவுன், 2 செல்வானந்தன் நகர் என்ற முகவரியில் வசித்து வரும் துரைக்கண்ணு மகன், இந்து, 36 வயதுள்ள காரல்மார்க்ஸ்.
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் மன்னார்குடி டவுன், 30 செல்வானந்தன் நகர் என்ற முகவரியில் வசித்து வரும் பெரியகருப்பன் மகன், இந்து, 42 வயதுள்ள முத்துபாண்டி.
3. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் மன்னார்குடி டவுன், 116/20 ஏ, செல்வானந்தன் நகர் என்ற முகவரியில் வசித்து வரும் மோகன் மனைவி, இந்து,, 44 வயதுள்ள ஜமுனாமோகன்.

// **எதிர்**//

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் மன்னார்குடி டவுன், அன்னவாசல் தெரு, மெயின்ரோடு ஜெயவிலாஸ் தொடக்கப்பள்ளி அருகில் என்ற முகவரியில் வசித்து வரும் ராகாவச்சாரி மகன், இந்து, 60 வயதுள்ள நாராயணன்.
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி டி.மு.இலாக்கா மற்றும் மன்னார்குடி டவுன், மன்னார்குடி நகராட்சி அலுவலக வளாகம் என்ற முகவரியில் இயங்கி வரும் அதற்காக அதன் நகராட்சி ஆணையர். ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது அசல் வழக்கில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு விசாரணைக்காக போடப்பட்ட வழக்கில் மனுதாரர் தரப்பில் காலதாமதத்துடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு குறியீடு செய்ய உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 7 விதி 14(3) மற்றும் பிரிவு151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 10.12.2021

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 16.12.2021

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 04.04.2022 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு.K. சிவசுந்தர், திரு. M. நிலவழகன், திரு. R.கண்ணதாசன் ஆகியோர்களும், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. R. சம்பத்குமார் அவர்களும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்கள் முன்னிலையாகியும், போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், அழைக்கப்பட்டும் வருகையில்லாததாலும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் உண்மை தன்மை, நம்பகத்தன்மை மற்றும் ஏற்கும் தன்மைக்கு உட்பட்டு இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

C KALAIVANI Digitally signed by C KALAIVANI

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.